உ

ஓம் :

# ஸ்ரீநவக்கிரக நல்லஞ்சலி!



இயற்றியது:

என். எஸ். சிதம்பரம்.

நவம்பர், 1964.
உரிமை அனைத்தும் ஆசிரியருக்கே.



**என். எஸ். சிதம்பரம்**
(இந்நவக்கிரக நல்லஞ்சலியை இயற்றியவர்)


விரைவில் வெளிவருகிறது!

**இசைக்கோயில்!**

ஆசிரியர் :
என். எஸ். சிதம்பரம்.

இன்சுவைத் தமிழிசைப் பாடல்கள் அடங்கியது.
*விலை ரூ. 2*


உ

ஓம் :

# ஸ்ரீநவக்கிரக நல்லஞ்சலி!




இயற்றியது :
என். எஸ். சிதம்பரம்.

சுரப்படுத்தியது :
சங்கீத வித்வான்
எஸ். பாலசுப்ரமண்யம்.



கிடைக்குமிடம் :—

**தி இன்டியன் மியூசிக் பப்ளிஷிங் ஹௌஸ்,**
**4, பந்தர் தெரு, சென்னை-1.**

விலை 75 பை.

உ
ஓம் :

# இந்நூலைப்பற்றி....

நவக்கிரகங்களை நல்ல பக்தியுடன் அஞ்சலி செய்பவர்களுக்கு நலன்கள் அனைத்தும் உண்டாகும் என்பது உறுதி. அவரவர் புரிந்துள்ள நல்வினை, தீவினைகளுக் கேற்றவாறு நவக்கிரகங்கள் பலன்களை அளிக்கின்றன. 'பதவி பூர்வ புண்யாளும்' என்று ஆன்றோர்கள் பகர்ந்திருப்பது சிந்தித்துப் பார்த்தற்குரியது. நவக்கிரகங்களை நற்சிந்தையோடு போற்றிப் பணிந்து புகழ்ந்து பாடிக் கொண்டாடி யாவரும் நலம் பெற வேண்டும் என்னும் பெரு விருப்புடன் இந் 'நவக்கிரக நல்லஞ்சலி' இயற்றப் பெற்றுள்ளது.

இந்த அஞ்சலியில் வரும் இசைப்பாடல்களுக்கு சங்கீத வித்வான் ஸ்ரீ எஸ். பாலசுப்ரமண்யம் அவர்கள் சுரக்குறிப்புக்கள் அமைத்துள்ளார்கள். இந்நூலைப் பெருங்கருணையுடன் பார்வையிட்டு இசைப்பேராசிரியர் சங்கீத சாகரர் ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி அவர்கள் இனியதோர் அணிந்துரை அளித்துள்ளார்கள். இவ்விருவருக்கும், இந்நூல் வெளிவருவதில் மிகுந்த ஆர்வம் காட்டிய இசைச்செல்வர் ஸ்ரீ கே. முத்துசாமி ஐயர் அவர்களுக்கும் இதயம் கனிந்த பெருநன்றியைப் பெரிதும் உரிமையாக்குகின்றேன்.

இந்நூலை அன்பர்கள் பயன்படுத்தி நவக்கிரகங்களின் இன்னருளுக்குப் பாத்திரமாகும் வண்ணம் நவக்கிரகங்களை இதய நிறைவுடன் பிரார்த்திக்கிறேன்.

வாழ்க உலகெலாம்!

19, தேசிகர்சாமி தெரு,
திருமயிலை, சென்னை-4,
27—10—1964.

அடியவன்,
என். எஸ். சிதம்பரம்.

உ

# அணிந்துரை

Sangita Sastra Ratnakara
Prof: **P. SAMBAMOORTHY**, B.A., B.L.,
Director:
Sangita Vadyalaya, Madras. (Retd.)
Visiting Professor
S.V.College of Music & Dance, Tirupati.

PHONE: 71907
Residence:
**116, Santhome High Road,**
**Mylapore, Madras-4.**

29th November 1964

ஸ்ரீ N. S. சிதம்பரம் அவர்கள், 'நவக்கிரக நல்லஞ்சலி' என்னும் நூலை வெளியிட்டு, இசையுலகிற்குச் சிறந்த பணியாற்றியிருக்கிறார் எனக் கூறலாம். நவக்கிரகங்களைப் பற்றி விரிவான முறையில் கீர்த்தனைகளை இயற்றியவர் ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதராவர். அந்தக் கீர்த்தனைகளைப் பாடிக் கிரகதோஷங்களினால் பீடிக்கப்பட்ட பலர், நலன்களை அடைந்ததாகத் தெரிய வருகிறது. அந்தக் கீர்த்தனைகள் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளமையினால், பலருக்கு அவைகளின் உட்கருத்துக்கள் சரியாக விளங்காமற் போகக் கூடும். நவக்கிரகங்களின் தன்மைகளையும், குணங்களையும் இந்தத் தமிழ்க் கீர்த்தனைகள் நன்றாக விளக்குகின்றன. எளிய வர்ண மெட்டுக்களிலும் இந்தப் பாட்டுக்கள் அமைந்துள்ளன. சீரான ஸ்வர லயக் குறிப்புக்களுடன் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் பாட்டுக்களைப் பலர் எளிதாகக் கற்றுக் கொள்ளலாம். வித்வான்களும், இசை ஆசிரியர்களும் இந்தப் பாட்டுக்களைக் கற்று, பலபேர்களுக்குச் சொல்லிக் கொடுத்து இந்த உருப்படிகளைப் பரவச் செய்வார்களென நம்புகிறேன்.

P. SAMBAMOORTHY.

உ
ஓம் :

# ஸ்ரீநவக்கிரக நல்லஞ்சலி!

## ஸ்ரீகணபதி துதி!

நவநா யகர்தம்மை நான்பாடுந் தன்மை
தவஞ்சேர் கணபதியே தா!

## 1. ஸ்ரீசூரிய பகவான்!

செம்மைநிறக் கதிர்வீசிச் செகமெல்லாம் புரக்கும்
சீர்படைத்த விண்ணரசே! சிவம்திகழ்செம் மணியே!
சிம்மமெனும் வீடாண்டும் சீர்மேட வீட்டில்
தெளிந்தஉச்சம் பெற்றும்உயர் திருவருளும் கோவே!
இம்மையிலே கண்கண்ட இறையெனுமோர் சுடரே!
இனியதந்தைக் கிரகமதாய் இலங்கிடுமோர் வடிவே!
எம்மைக்கும் நலம்பயக்கும் எழில்ஆன்ம ஞானம்
இனிதுதவும் உனைப்பணிந்தேன்! எனைத்தினம்ஆண்
டருளே!

இராகம்: நாட்டகுறிஞ்சி. தாளம்: ஆதி.

பல்லவி

சிம்மாதி பதியே!—கதிர்நிதியே!
செம்மணியே! நின் செழுங்கழல் சரணம்! —(சி)

அநுபல்லவி

இம்மா நிலத்துறும் இருளினைப் போக்குவாய்!
இசைபெற யெங்கணும் இன்னொளி யாக்குவாய்! —(சி)

சரணம்

காரண காரிய கர்த்தன் நீயே!
கருதிடும் ஆன்மமெய்க் காரகன் நீயே!
சீரருள் சிவமாய்ச் செழிப்பவன் நீயே!
செல்வத் தந்தையாய்ச் சிறப்பவன் நீயே! —(சி)



### ஸ்ரீசூரியன்!

28-வது மேளம்]

{ ஸரிகமதநிஸ்
{ ஸ்நிதமகஸ

நாட்டகுறிஞ்சி ராகம் — ஆதி தாளம்

பல்லவி

; நிஸ் ஸ்நி நீதா மா, மகாஸ | ; நிதநீ ; | ரீ கா மா ; ||
; சிம் மா .. தி, பதியே | ; க.திர்; | நி தி யே ; ||
; ஸாம கமா நிதநிப தநிஸா | ; நிஸா நிதா | மகமா மநிதநி ||
; செம்மணி யே . . . நின். | ; செழுங்கழல் | ச.ர.ணம். . ||
பத
. .

(சிம்மாதி பதியே)

அநுபல்லவி

; ஸாஸா ; நீதா-தஸ் நித | நிப த நீ ஸ் நீ | ஸா ; ஸ்ஸா ||
; இம்மா ; நிலத்து . றும். | . . இருளினைப் | போக்குவாய் ||
; ஸ்மாக்ஸா நிதநிப தநிஸா | ; நிஸாநிதா | மகமா மநிதநி ||
; இசைபெற யெங் . . க . ணும் | ; இன்னொளி | யா.க்கு.வாய் ||
பத
. .

(சிம்மாதி பதியே)

சரணம்

; தா,ததா தா; தாதா | ; நீ; தா | நீ தா நீ ; ||
; கா,ரண கா; ரி ய | ; கர்த்தன் | நீ . யே ; ||
; த நீ த மா கா ம ப க ரிஸா | ; மா,கமா | நிதநீஸா ; ||
; கருதிடும் ஆ . ன் ம.மெய்க் | ; காரகன் | நீ . . யே ; ||

(அநுபல்லவி போல்)

; சீரருள் சிவமாய்ச் செழிப்பவன் நீயே
; செல்வத் தந்தையாய்ச் சிறப்பவன் நீயே || (சிம்மாதி பதியே)

## 2. ஸ்ரீசந்திர பகவான்!

தண்ணமுத கிரணமதால் தரணிமகிழ் விக்கும்
தாய்க்கிரக வான்சுடரே! சந்திரநன் மதியே!
புண்ணியஞ்சேர் வீடாகும் பொற்கடகம் ஆளும்
புகழ்நிதியே! இடபமதில் பொருந்தும்உச்சம் பெறுமோர்
கண்ணியமார் ஒளிமுத்தே! கனதனமும் மனத்திற
கற்பனையும் தந்திடுமோர் கருணைமிகு விளக்கே!
எண்ணமதை இயக்குவிக்கும் இறைசக்தித் தாயாய்
இலங்குகின்ற உனைப்பணிந்தேன்! எனைத்தினம்ஆண்
டருளே!

இராகம்: வராளி. தாளம்: ஆதி.

பல்லவி

**கடகாதி பதியே!—குளிர்மதியே!**
கலைவளர் நிதியே! கழலிணை சரணம்! —(க)

அநுபல்லவி

சடைசேர் பரமனின் முடிமிசை மேவும்
சந்திர உருவே! சுந்தர வடிவே! —(க)

சரணம்

அற்புதக் கற்பனை ஆயிரம் தருவாய்!
அன்னைநல் சக்தியாய் அழகுடன் மிளிர்வாய்!
பொற்பதம் தொழுதிடும் புண்ணியர் தமக்குப்
புவனம் போற்றிடும் புகழ்நிலை அளிப்பாய்! —(க)



## ஸ்ரீசந்திரன்!

39-வது மேளம்] { ஸகரிகமபதநிஸ் / ஸ்நிதபமகரிஸ

வராளி ராகம் — ஆதி தாளம்

பல்லவி

; ஸ் நி தபபா,ம கா, கரீஸா | ; ஸநிகா ; | மா தா பா ; ||
; க ட கா . . . தி, பதியே | ; கு.ளிர் ; | ம தி யே ; ||
; கமாதநீ ஸ்நிரீஸா ; | ; ஸ்நீதபம | காகா கமபத ||
; கலைவளர் நி . தியே | ; கழலிணை | ச ர . ணம் . . ||
நிஸ்
(கடகாதி பதியே)

அநுபல்லவி

; ஸ் நி தபமகா;, மதாநிஸா | ; ரிகாரிஸா | ரிரிஸ்தா நீஸா ||
; **சடைசே..ர்**; பரமனின் | ; முடிமிசை. | மே . . . . வும் ||
; கா,ப்மாகரீ ஸ்தநீஸா ; | ; தாஸ்நீ,தபா | பமகரி.கமபத ||
; சந் . . திர உ. ருவே | ; சு ந் . . த ர | வ.டி . வே. . . ||
நிஸ்
(கடகாதி பதியே)

சரணம்

;, பாதபா;, பாமதா | ; தாஸ்நீ, தபா | ததபமகா,ரி ||
;, அற்புதக்;, கற்பனை | ; ஆ . யிரம் | த . ரு . வா-ய் ||
; கமாகரீ ஸதநீஸா; | ; ஸநிகாகா | மாபத.தபபா ||
; அன்னைநல். சக்தியாய்; | ; அழகுடன் | மிளிர்.வா.ய் ||
(அநுபல்லவி போல்)
; பொற்பதம் தொழுதிடும் புண்ணியர் தமக்குப் ||
; புவனம் போற்றிடும் புகழ்நிலை அளிப்பாய் || (கடகாதி பதியே)